## திருப்பலிக்குத் தயாரிப்பு

### புனித அம்புரோசின் மன்றாட்டு

அன்பான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, பாவியாகிய நான் எனது சொந்தத் தகுதியை முன்னிட்டு அன்று; உம் பேரன்பிலும் நன்மையிலும் நம்பிக்கை வைத்து அச்ச, நடுக்கத்துடன் உமது இனிமைமிக்க திருவிருந்தில் பங்கேற்க வருகின்றேன். ஏனெனில் என் உள்ளமும் உடலும் பல்வகைக் குற்றங்குறைகளால் மாசுபட்டுள்ளன. எனது சிந்தனையையும் சொல்லையும் நான் கவனமுடன் கண்காணிக்கவில்லை. ஆகவே அன்பு இறைவா, அஞ்சுதற்கு உரிய மாண்புமிக்கவரே, இழிநிலையில் உள்ள நான் இடர்களால் சூழப்பட்டு, பேரன்பின் ஊற்றாகிய உம்மை நோக்கி ஓடிவருகின்றேன். நலம் பெற உம்மை நோக்கி விரைகின்றேன்; உமது பாதுகாப்பில் அடைக்கலம் புகுகின்றேன். எனக்குத் தீர்ப்பிடும் நடுவராக அல்ல, என் மீட்பராகவே உம்மைக் காண விழைகின்றேன். ஆண்டவரே, உமக்கு என் காயங்களைத் திறந்து காட்டுகின்றேன். என்னுடைய இழிநிலையை உம்மிடமிருந்து மறைத்தேனில்லை. என்னுடைய பாவங்கள் எண்ணிறந்தவை, பெரியவை. அவற்றின் பொருட்டு மிகவும் அஞ்சுகின்றேன். உமது அளவற்ற இரக்கத்தில் நம்பிக்கை வைக்கின்றேன். ஆகவே இரக்கமுடன் உமது பார்வையை என்மேல் திருப்பியருளும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, என்றுமுள்ள அரசரே, இறைவனும் மனிதருமானவரே. நீர் மனிதருக்காகச் சிலுவையில் அறையப்பட்டீர். உம்மீது நம்பிக்கை வைத்திருக்கும் எனக்குச் செவிசாய்த்தருளும். இழிநிலையிலும் பாவத்திலும் மூழ்கியுள்ள என்மீது இரக்கம் வையும். நீர் என்றும் வற்றாத இரக்கத்தின் ஊற்று. எங்கள் மீட்புக்காகப் பலியானவரே, போற்றி! எனக்காகவும் மக்கள் இனங்கள் அனைத்துக்காகவும் சிலுவை என்னும் கழுமரத்தில் பலியானீர். சிலுவையில் அறையப்பட்ட என் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் காயங்களிலிருந்து வழிந்தோடி உலகம் அனைத்தின் பாவங்களைக் கழுவும் பெருமைமிக்க, உயர்மதிப்புள்ள திரு இரத்தமே போற்றி!

ஆண்டவரே, உமது திரு இரக்கத்தால் நீர் மீட்டருளிய உமது படைப்பாகிய என்னை நினைவுகூர்ந்தருளும். என் பாவங்களுக்காக மனம் வருந்துகின்றேன். என் செயல்களைச் செம்மையாக்க விரும்புகின்றேன். ஆகவே கனிவிரக்கமுள்ள தந்தையே என் எல்லாத் தீச்செயல்களையும் பாவங்களையும் என்னிடமிருந்து போக்கியருளும். அதனால் உள்ளமும் உடலும் தூய்மை பெற்று தூய நற்கருணையை உட்கொள்ளத் தகுதி பெறுவேனாக. தகுதியற்றவனாயினும் உமது திரு உடலையும் திரு இரத்தத்தையும் உட்கொள்ள நான் விரும்புகின்றேன். அது என் பாவங்களை மன்னிப்பதாக, என் குற்றங்களை முழுமையாகக் கழுவுவதாக, தீய எண்ணங்களை விலக்குவதாக, நல்லுணர்வுகளைத் தூண்டியெழுப்புவதாக. உமக்கு உகந்த நலம் பயக்கும் செயல்களைச் செய்ய உதவுவதாக. என் ஆன்மாவுக்கும் உடலுக்கும் எதிராக என் பகைவர் செய்யும் சூழ்ச்சிகளிலிருந்து காக்கும் உறுதியான அரணாய் அமைவதாக. ஆமென்.

## அக்குயினோ நகர்ப் புனித தாமசின் மன்றாட்டு

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா! உம் ஒரே திருமகனாகிய எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளடையாளத்தைப் பெற இதோ நான் வருகின்றேன்.

வாழ்வு அளிக்கும் மருத்துவரை நோயுற்றோர் நாடுவது போலவும் பாவக் கறை படிந்தவர் இரக்கத்தின் ஊற்றினைத் தேடுவது போலவும் பார்வை இழந்தவர் நிலையான மாட்சியின் ஒளியை விழைவது போலவும் ஏழையும் வறியவனும் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரை அண்டிச் செல்வது போலவும் நானும் உம்மிடம் வருகின்றேன். ஆகவே அளவற்ற உமது வள்ளன்மையின் நிறைவை மன்றாடுகின்றேன். அருள்கூர்ந்து என் பிணிகளிலிருந்து என்னை நலமாக்கும்; என் பாவக் கறையைக் கழுவிப் போக்கியருளும்; பார்வையற்ற எனக்கு ஒளி தாரும்; ஏழை என்னை வளமாக்கும்; ஆடையற்ற எனக்கு ஆடை அணிவித்தருளும்.

இதனால் எனது ஆன்மாவின் மீட்புக்கு ஏற்ற வகையில் வானதூதரின் திரு உணவாகிய அரசருக்கெல்லாம் அரசரும் ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவருமானவரைத் தகுந்த வணக்கத்துடனும் மனத் தாழ்மையுடனும் தகுந்த மனத்துயருடனும் இறைப்பற்றுடனும் தகுந்த தூய்மையுடனும் நம்பிக்கையுடனும் தகுந்த நோக்குடனும் கருத்துடனும் உட்கொள்வேனாக. ஆண்டவரின் திரு உடல், திரு இரத்தம் இவற்றின் அருளடையாளத்தை மட்டும் அல்ல, அவ்வருளடையாளத்தின் உட்பொருளையும் ஆற்றலையும் எனக்குத் தந்தருள உம்மை வேண்டுகின்றேன்.

சாந்தம்மிக்க இறைவா, கன்னி மரியாவிடமிருந்து உடலெடுத்த எங்கள் ஆண்டவரும் உம் ஒரே திருமகனுமாகிய இயேசு கிறிஸ்துவின் திரு உடலை உட்கொள்ள எனக்கு அருள்புரியும்.

இவ்வாறு அவருடைய மறை உடலோடு இணைக்கப்படவும் அவருடைய உறுப்புகளில் ஒன்றாக எண்ணப்படவும் தகுதி பெற அருள்கூர்வீராக.

அன்புமிக்க தந்தையே, இவ்வருளடையாளத்தில் மறைந்திருக்கும் அவரை இம்மையில் பெற விரும்பும் நான் மறுமையில் அவரது திருமுகத்தை என்றென்றும் நேரில் கண்டு களித்திட அருள்வீராக.

உம்மோடு என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றேன். ஆமென்.

## புனித கன்னி மரியாவை நோக்கி மன்றாட்டு

பக்தியும் இரக்கமும் உள்ள தாயே, புனிதமிக்க கன்னி மரியே, தாழ்நிலையில் உள்ள தகுதியற்ற பாவியாகிய நான், முழு இதய பற்றுதலோடு உம்மிடம் அடைக்கலம் புகுந்து உமது பரிவிரக்கத்தை மன்றாடுகின்றேன்: சிலுவையில் தொங்கிய உம் அன்புத் திருமகனுக்குத் துணை நின்றது போல, இரங்கத்தக்க பாவியாகிய எனக்கும், இங்கும் புனிதத் திரு அவை முழுவதிலும் இன்று திருப்பலி நிறைவேற்றும் அருள்பணியாளர் அனைவருக்கும் கனிவுடன் துணை செய்ய அருள்கூர்ந்தருளும்.

இதனால் உமது அருளுதவியைப் பெற்று முழுமையான, பிளவுபடாத மூவொரு கடவுள் திருமுன் அவருக்கு உகந்த, ஏற்புடைய பலியைத் தகுதியுடன் ஒப்புக்கொடுக்க ஆற்றல் பெறுவோமாக. ஆமென்.

## திருப்பலியின் கருத்து

எல்லாம் வல்ல இறைவனின் புகழ்ச்சிக்காகவும் விண்ணகத் திரு அவை முழுவதன் மாட்சிக்காகவும் எனக்கும் இவ்வுலகில் போராடும் திரு அவைக்கும் பயன் அளிக்கவும் தங்களுக்காகப் பொதுவிலும் குறிப்பாகவும் மன்றாடக் கேட்டுக்கொண்ட அனைவருக்காகவும் புனித உரோமைத் திரு அவையின் நலனுக்காகவும் அதே திரு அவையின் திருவழிபாட்டில் முறைப்படித் திருப்பலி நிறைவேற்றி நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு உடலையும் திரு இரத்தத்தையும் ஒப்புக்கொடுக்க விரும்புகின்றேன். ஆமென்.

எல்லாம் வல்லவரும் இரக்கம் உள்ளவருமான ஆண்டவர் மகிழ்ச்சியையும் அமைதியையும் திருந்திய வாழ்வையும் உண்மையான மனந்திரும்புதலுக்கான வாய்ப்பையும் தூய ஆவியின் அருளையும் ஆறுதலையும் நற்செயல்கள் புரிவதில் விடாமுயற்சியையும் நமக்கு அருள்வாராக. ஆமென்.

## திருப்பலிக்குப்பின் நன்றிகூறல்

## அக்குயினோ நகர்ப் புனித தாமசின் மன்றாட்டு

ஆண்டவரே, தூயவரான தந்தையே, என்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, பாவியும் தகுதியற்ற உம் பணியாளனுமாகிய என்னை என்னுடைய தகுதியைப் பாராமல் உமது இரக்கத்தின் மேன்மையை முன்னிட்டு எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள திரு உடலையும் திரு இரத்தத்தையும் உண்டு நிறைவு பெற அருள்கூர்ந்தமைக்காக உமக்கு நன்றி கூறுகின்றேன்.

இத்தூய திருவிருந்து என்னைத் தண்டனைக்கு உள்ளாக்காமல் என்னை மன்னித்து மீட்பு அளிக்கும் பிணையாக அமைவதாக.

இது எனக்கு நம்பிக்கையின் கவசமாகவும் நல் விருப்பங்களின் கேடயமாகவும் என் தீச்செயல்களை விலக்குவதாகவும், ஊனியல்பின் இச்சைகள், சிற்றின்ப நாட்டம் ஆகியவற்றை அழிப்பதாகவும் அமைவதாக.

இது அன்பு, பொறுமை, மனத்தாழ்மை, பணிவு முதலிய எல்லா நற்பண்புகளையும் வளரச் செய்வதாக.

வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் எனக்குத் தீங்கிழைப்போர் அனைவரின் சூழ்ச்சிகளிலிருந்து உறுதியாக என்னை இது பாதுகாப்பதாக. இது என் உடலிலும் உள்ளத்திலும் எழும் தீய நாட்டங்களை முற்றிலும் அழிப்பதாக.

இவ்வாறு உண்மையான ஒரே கடவுளாகிய உம்மோடு உறுதியாக ஒன்றித்து எனது வாழ்வின் முடிவில் நிறைவான மகிழ்ச்சியை அடைவேனாக.

பாவியாகிய என்னை வியப்புக்கு உரிய உமது விண்ணக விருந்துக்கு அழைத்துச் செல்லத் திருவுளம் கொள்ள வேண்டும் என உம்மை வேண்டுகின்றேன்: அங்கே நீர் உம் திருமகனோடும் தூய ஆவியாரோடும் உம் புனிதர்களுக்கு உண்மையான ஒளியாகவும் முழுநிறைவாகவும் என்றென்றுமுள்ள பேரின்பமாகவும் இனிமையின் சிகரமாகவும் நிறைவான மகிழ்ச்சியாகவும் விளங்குகின்றீர். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

## தூய்மைமிகு மீட்பரை நோக்கி மன்றாட்டுகள்

கிறிஸ்துவின் ஆன்மாவே, என்னைப் புனிதப்படுத்தியருளும்.

கிறிஸ்துவின் திரு உடலே, என்னை மீட்டருளும்.

கிறிஸ்துவின் திரு இரத்தமே, எனக்கு எழுச்சியூட்டியருளும்.

கிறிஸ்துவின் விலாவிலிருந்து வழிந்தோடிய தண்ணீரே, என்னைக் கழுவியருளும்.

கிறிஸ்துவின் பாடுகளே, என்னைத் தேற்றியருளும்.

ஓ நல்ல இயேசுவே, எனக்குச் செவிசாய்த்தருளும்.

உம் திருக்காயங்களுள் என்னை மறைத்தருளும்.

உம்மிடமிருந்து என்னைப் பிரியவிடாதேயும்.

தீய பகைவரிடமிருந்து என்னைக் காத்தருளும்.

எனது இறப்பின் வேளையில் என்னை அழைத்தருளும்.

உம்மிடம் வர எனக்குக் கட்டளையிட்டருளும்.

உம் புனிதர்களோடு எக்காலமும் உம்மைப் புகழச் செய்தருளும். ஆமென்.

## தன்னையே கையளித்தல்

ஆண்டவரே,

எனது தன்னுரிமை முழுவதையும் எடுத்துக் கொள்ளும்.

என்னுடைய நினைவு, அறிவு, விருப்பம் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும்.

எனக்குள்ள உடைமை அனைத்தும் நீரே எனக்குத் தந்தவை அன்றோ!

அவற்றையெல்லாம் உமக்கே திருப்பித் தருகின்றேன்;

உமது விருப்பத்துக்கு ஏற்ப நீரே ஆண்டு நடத்த

உமது அன்பு ஒன்றையே எனக்கு அளித்தருளும்.

அதுவே எனக்கு நிறை செல்வம் ஆகும்;

நான் வேறொன்றும் உம்மிடமிருந்து கேளேன்.

## சிலுவையில் அறையப்பட்ட நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நோக்கி மன்றாட்டு

ஓ! நன்மையும் இனிமையும் மிகுந்த இயேசுவே, இதோ! நான் உம் திருமுன் முழங்காலிட்டுப் பணிந்து வணங்குகின்றேன், மிகுந்த உள்ளார்வத்துடன் உம்மை வேண்டி, கெஞ்சிக் கேட்கின்றேன். நீர் எனது இதயத்தின் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றை உயிரோட்டமுள்ளவை ஆக்கும்.

என் பாவங்களுக்கான உண்மையான மனத்துயரையும் பாவங்களிலிருந்து விலகிச் செல்லும் உறுதியான விருப்பத்தையும் பதித்தருளும்.

ஓ! நல்ல இயேசுவே! “என் கைகளையும் கால்களையும் அவர்கள் துளைத்தார்கள்; என் எலும்புகளை எல்லாம் நான் எண்ணிவிடலாம்” (திபா 21:17-18) என்று இறைவாக்கினர் தாவீது ஏற்கெனவே திருவாய் மலர்ந்தது போன்று நானும் உம்முடைய ஐந்து திருக்காயங்களையும் என் கண்முன் கொண்டு மிகுந்த உள்ளன்போடும் துயரத்தோடும் என் உள்ளத்தில் இருத்திச் சிந்திக்கின்றேன்.

**திருத்தந்தை பதினோராம் கிளமெந்து பெயரில் வழங்கும் பொது மன்றாட்டு**

நம்புகின்றேன். ஆண்டவரே, இன்னும் உறுதியுடன் நம்புவேனாக.

எதிர்நோக்குகின்றேன். இன்னும் ஆற்றலுடன் எதிர்நோக்குவேனாக.

அன்பு செய்கின்றேன். இன்னும் ஆர்வமுடன் அன்பு செய்வேனாக.

வருந்துகின்றேன். இன்னும் உருக்கமுடன் வருந்துவேனாக.

நீரே என் முழுமுதற்பொருள் என உம்மை வணங்குகின்றேன்.

நீரே எனது இறுதி முடிவாய் இருக்க விரும்புகின்றேன்.

நீரே என் நிலையான கொடையாளர் எனப் போற்றுகின்றேன்.

நீரே என்னை என்றும் காப்பவர் எனக் கூவி அழைக்கின்றேன்.

உமது ஞானத்தால் என்னை வழிநடத்தும்.

உமது நீதியால் என்னை நெறிப்படுத்தும்.

உமது இரக்கத்தால் என்னைத் தேற்றும்.

உமது ஆற்றலால் என்னைக் காப்பாற்றும்.

ஆண்டவரே, என் சிந்தனைகள் உமக்கு ஏற்றனவாக இருக்கவும்

என் சொற்கள் உம்மைப் பற்றியனவாக இருக்கவும்

என் செயல்கள் உமக்கு உகந்தனவாக இருக்கவும்

என் சுமைகளை உம் பொருட்டு தாங்கிக் கொள்ளவும்

அவற்றை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றேன்.

நீர் விரும்புவதையே நானும் விரும்புகின்றேன்.

நீர் விரும்புவதால்தான் நான் அதை விரும்புகின்றேன்.

நீர் விரும்புகின்றவாறே, நானும் விரும்புகின்றேன்.

நீர் விரும்பும்வரை நான் விரும்புகின்றேன்.

ஆண்டவரே, என் அறிவுக்கு ஒளியூட்டவும்

என் விருப்ப ஆற்றலைத் தூண்டியெழுப்பவும்

என் இதயத்தைத் தூய்மைப்படுத்தவும்

என் ஆன்மாவைப் புனிதப்படுத்தவும் உம்மை வேண்டுகின்றேன்.

கடந்த கால குற்றங்களுக்காக அழுது புலம்புவேனாக.

எதிர்வரும் சோதனைகளை விரட்டி அடிப்பேனாக.

தீய நாட்டங்களைத் திருத்திக் கொள்வேனாக.

உகந்த நற்பண்புகளை வளர்ப்பேனாக.

நல்லவரான இறைவா,

உம்மை அன்பு செய்யவும் என்னை வெறுக்கவும்

பிறர்மீது அக்கறை கொள்ளவும் உலகை இகழ்ந்து ஒதுக்கவும்

எனக்கு அருள்தாரும்.

பெரியோருக்குக் கீழ்ப்படியவும்,

சிறியோருக்கு உதவி செய்யவும்,

நண்பருக்கு நல்லுரை வழங்கவும்,

பகைவரை மன்னிக்கவும் முயல்வேனாக.

சிற்றின்பத்தைக் கடுமையான தன்னொறுத்தலாலும்

பேராசையை வள்ளன்மையாலும்

சினத்தைப் பொறுமையாலும்

மந்த நிலையைப் பேரார்வத்தாலும் வெல்வேனாக.

முடிவெடுத்தலில் முன்மதியையும்

இடர்களில் உறுதியையும்

எதிர்ப்புகளில் பொறுமையையும்

வளமையில் மனத் தாழ்மையையும் எனக்குத் தந்தருளும்.

ஆண்டவரே,

நான் இறைவேண்டலில் கவனத்தையும்

விருந்துண்பதில் கட்டுப்பாட்டையும்

என் கடமைகளில் ஊக்கத்தையும்

தீர்மானிப்பதில் உறுதியையும் கொண்டிருக்கச் செய்தருளும்.

உள்ளத்தில் மாசின்மையையும்

தோற்றத்தில் தன்னடக்கத்தையும்

நடத்தையில் முன்மாதிரியையும்

வாழ்வில் ஒழுங்குமுறையையும் கொண்டிருக்கச் செய்வீராக.

எனது இயல்பைப் பணிய வைப்பதிலும்

உமது அருளைப் பெருக்குவதிலும்

உம் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதிலும்

மீட்பைப் பெற்றுக்கொள்வதிலும்

நான் தொடர்ந்து கவனமுடன் செயல்படுவேனாக.

இவ்வுலகு சார்ந்தவை எத்துணைத் தாழ்ந்தவை என்றும்

விண்ணைச் சார்ந்தவை எத்துணை உயர்ந்தவை என்றும்

காலம் எத்துணை குறுகியது என்றும்

நிலையானவை எத்துணை நீடிப்பவை என்றும்

உம்மிடம் கற்றுக்கொள்வேனாக.

சாவை எதிர்பார்த்திருக்கவும்

தீர்ப்பைப் பற்றி அச்சம் கொண்டிருக்கவும்

நரகத்தினின்று தப்பித்துக்கொள்ளவும்

பேரின்ப வீட்டுக்கு வந்து சேரவும் அருள்தாரும்.

எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

## புனித கன்னி மரியாவை நோக்கி மன்றாட்டு

கன்னியும் தாயுமான புனிதமிக்க மரியே,

உமது மாசில்லாத் திருவயிற்றில் கருத்தரித்து, பெற்றெடுத்து, பாலூட்டி

அன்புடன் அரவணைத்த உம் அன்புத் திருமகனை உட்கொண்டுள்ளேன்.

நீர் மகிழ்ச்சியுடன் உற்றுநோக்கிய திருமகனையே

மனத் தாழ்மையுடனும் அன்புள்ளத்துடனும் உமக்கு அளிக்கின்றேன்.

நீர் அவரை உம் கைகளில் ஏற்று,

அவருக்கு உமது இதய அன்பைப் பொழிந்து

அவரை உமது மாட்சிக்காகவும்

என்னுடையவும் உலக மாந்தர் அனைவருடையவும் தேவைகளுக்காகவும்

தூய்மைமிகு மூவொரு கடவுளை

ஒப்புயர்வற்ற விதமாக வழிபட்டு அவருக்கு ஒப்புக்கொடுப்பீராக.

ஆகையால், அன்புமிக்க அன்னையே,

என்னுடைய பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பையும்

இனி நான் அவருக்கு உண்மையுடன் ஊழியம் செய்யும் அருளையும்

அதன்பின் முடிவில் இறுதி அருளையும் பெற்றுத் தாரும்.

இவ்வாறு உம்மோடு சேர்ந்து முடிவில்லாக் காலமும்

அவரைப் புகழ்வேனாக. ஆமென்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே./

புனித மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். / ஆமென்.